**அனுப்புநர்**

தண்.வசுந்தராதேவி,
எம்.ஏ., எம்.எட்.,எம்.ஃபில்.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
இணை இயக்குநர் (கல்வி),
புதுச்சேரி.

**ந.க.எண். 005647/எச்.1/2019** **நாள் : 26.02.2019**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – மேல்நிலை இரண்டாமாண்டு (+2) பொதுத்தேர்வு, மார்ச் 2019 – தனித்தேர்வர்கள் – தேர்வு மையங்கள் – செய்முறைத் தேர்வு மற்றும் கேட்டல் / பேசுதல் திறன் தேர்வு நடத்துதல் தொடர்பான அறிவுரைகள் – சார்பு.

——————

நடைபெறவுள்ள மார்ச் 2019 மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வில் (+2) பழைய நடைமுறையின்படி (ஒவ்வொரு பாடத்திற்கும் 200 மதிப்பெண்கள் வீதம் மொத்தம் 1200 மதிப்பெண்களுக்கு) தேர்வெழுதவுள்ள தனித்தேர்வர்களுக்கென அமைக்கப்பட்டுள்ள தேர்வு மையங்களின் முதன்மைக் கண்காணிப்பாளர்கள் / பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு கீழ்க்காணும் அறிவுரைகளை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

1. பழைய நடைமுறையின்படி மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வில் 100 மதிப்பெண்களுக்கான மொழிப்பாடம் / ஆங்கிலப்பாட முதல் தாளினையும், 80 மதிப்பெண்களுக்கான மொழிப்பாடம் / ஆங்கிலப்பாட இரண்டாம் தாளினையும், எழுதி தேர்ச்சி பெறாத தேர்வர்கள், மார்ச் 2019 முதல் 90 மதிப்பெண்களுக்கு ஒரே தாளாக 2.30 மணிநேரத்தில் நடத்தப்படும் மொழிப்பாடம் / ஆங்கிலப்பாடத்தேர்வினை எழுதுதல் வேண்டும். அப்பாடத்தேர்வுகளில் அத்தேர்வர்கள் 90 மதிப்பெண்களுக்கு பெறும் மதிப்பெண்களை 2 –ஆல் பெருக்கி 180 மதிப்பெண்களுக்கான மதிப்பெண்களாக மாற்றம் செய்து, கேட்டல் / பேசுதலுக்கான 20 மதிப்பெண்களையும் சேர்த்து மொத்தம் 200 மதிப்பெண்களுக்கான மதிப்பெண்களாக மாற்றம் செய்து வழங்கப்படும். இவ்விவரத்தினை தேர்வு மைய அறிவிப்பு பலகையில் ஒட்டி வைக்க வேண்டும்.

2. மேல்நிலைத் தேர்வினை பழைய பாடத்திட்டதில் தேர்வெழுதி மொழிப் பாடங்கள் (தமிழ், ஆங்கிலம்) / சிறப்பு மொழி (தமிழ்) பாடம் ஆகியவற்றில் தேர்ச்சி பெறாமல் தேர்வெழுதும் தனித் தேர்வர்கள் மற்றும் பங்கேற்காத தனித் தேர்வர்களுக்கு மட்டும் கேட்டல் / பேசுதல் திறன் தேர்வு நடத்தப்பட வேண்டும். ஏற்கனவே மேற்காண் தேர்வில் பங்கேற்றவர்களுக்கு மீளவும் கேட்டல் / பேசுதல் திறன் தேர்வினை நடத்தக்கூடாது.

3. செய்முறைத் தேர்வில் 40 மதிப்பெண்களுக்கும் குறைவாகப் பெற்று தேர்ச்சி பெறாத தனித்தேர்வர்களுக்கு மட்டும் செய்முறைத் தேர்வினை நடத்தினால் போதுமானது. எழுத்துத் தேர்வில் தேர்ச்சிப் பெறாமல், செய்முறைத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் மீண்டும் செய்முறைத் தேர்வு செய்யவேண்டியதில்லை. எழுத்துத் தேர்வினை மட்டும் எழுதினால் போதுமானது.

4. தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர் / பள்ளித்தலைமை ஆசிரியர் கற்றல் / கேட்டல் திறன்தேர்வு மற்றும் செய்முறைத்தேர்வு நடத்தப்படும் தேதி மற்றும் இடம் குறித்த அறிவிப்பினை தனித்தேர்வர்களுக்கு முன்கூட்டியே தெரிவிக்க வேண்டும். மேலும், இவ்விவரத்தினை அறிவிப்பு பலகையிலும் ஒட்டி வைக்க வேண்டும்.

5. செய்முறைத் தேர்வு மற்றும் கேட்டல் / பேசுதல் திறன் தேர்வு நடத்தப்படும் தனித்தேர்வர்களின் மதிப்பெண்களை பதிவு செய்வதற்கான மதிப்பெண் பட்டியல் படிவங்கள் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகின்றன. இப்படிவங்களைப் பூர்த்தி செய்து பள்ளி தலைமையாசிரியர் / முதன்மைக் கண்காணிப்பளர் சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தில் 19.03.2019-க்குள் ஒப்படைக்கப்பட வேண்டும்.

மேலும், மேற்குறிப்பிட்டவாறு தனித்தேர்வர்களுக்கான தேர்வு மையங்களின் முதன்மைக் கண்காணிப்பாளரிடமிருந்து பெறப்படும் மதிப்பெண் பட்டியல்களை சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர் 21.03.2019 அன்று இவ்வலுவலகத்தில் ஒப்படைத்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு:**

1. வெற்று மதிப்பெண் பட்டியல் படிவங்கள்
2. தனித் தேர்வர்களுக்கான தேர்வு மையங்கள்

**ஒம்./–**
**இயக்குநர்**

**நகல்**

அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.